செய்தித்தாள்:தினகரன் பக்கம்-19 நாள்:16.12.2017

# சாரண ஆசிரியர்களுக்கு அடிப்படை பயிற்சி



திருத்துறைப்பூண்டி சாய்ராம் பள்ளியில் சாரண ஆசிரியர்கள், வழிகாட்டி தலைவிகள், நீலப்பறவையர் தலைவிகள் அடிப்படை பயிற்சி முகாமில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமிநாதன் பேசினார்.

திருத்துறைப்பூண்டி, டிச.16: சாரணியர் சார்பில் சாரண மாவட்ட பாரத சாரண, ஆசிரியர்கள், வழிகாட்டித் தலைவிகள் மற்றும் நீலப் பறவையர் தலைவிகள் அடிப்படை குறித்த 7 நாள் பயிற்சி திருத்துறைப்பூண்டி சாய்ராம் பள்ளியில் நடைபெற்றது.

முகாமிற்கு சிஇஓ சுவாமிநாதன் தலைமை வகித்தார். பள்ளி நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம், மாவட்ட சாரண, சாரணி ஆணையர்கள் மணிவண்ணன், கல்யாணி, முன்னாள் அரசு வக்கீல் தர்மராஜன், உதவி தொடக்கக்கல்வி அலுவலர் இன்பவேணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் தொடக்க கருத்துக்களை முகாம் தலைவர்கள் செல்லத்துரை, சென்னை கஸ்தூரி, திருச்சி கீதா ரவீந்திரன் வழங்கினர். முகாமில் சாரண இயக்க வரலாறு, குறிக்கோள், நோக்கம், விதிமுறை, திசைக்காட்டும் கருவி, முதலுதவி, முடிச்சுகள், கயிற்றுக்கலை உள்ளிட்டவை குறித்து பயிற்சியளிக்கப்பட உள்ளது. முகாம் ஏற்பாடுகளை தலைமை ஆசிரியை லெட்சுமிபிரியா, உதவிச் செயலர் சக்கரபாணி, மாவட்ட சாரண, சாரணி அமைப்பு ஆணையர்கள் மோகன், கவிதா, சாரண ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர். மாவட்ட பொருளாளர் குருதெட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.

செய்தித்தாள்:தினமலர்    பக்கம்-8    நாள்:16.12.2017

# சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சி முகாம்

**திருத்துறைப்பூண்டி:** திருத்துறைப்பூண்டியில் மாவட்ட பாரத சாரண , சாரணியர் சார்பில் சாரண ஆசிரியர்கள், வழிகாட்டி தலைவிகள் மற்றும் நீலப் பறவையர் தலைவிகளுக்கு அடிப்படை பயிற்சி முகாம் சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடந்தது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சாமிநாதன் தலைமை வகித்தார். பள்ளி நிர்வாக பிரதிநிதி சோம சுந்தரம், மாவட்ட சாரண ஆணையர்கள் மணிவண்ணன், கல்யாணி, உதவி தொடக்க கல்வி அலுவலர் இன்ப வேணி, வக்கீல் தர்மராஜன் முன்னிலை வகித்தனர். முகாம் தலைவர்கள் செல்லத்துரை, சென்னை கஸ்துாரி, திருச்சி கீதா ஆகியோர் பேசினர். சாரண ஆசிரியர்கள் சீனிவாசன், கலைச்செல்வன், இளையராஜா, அய்யம் பெருமாள், வழிகாட்டி தலைவிகள் ஜெயம் , கலையரசி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை பள்ளி தலைமையாசிரியர் லெட்சுமி பிரியா, உதவி செயலாளர் சக்கரபாணி, மாவட்ட சாரண அமைப்பு ஆணையர்கள் மோகன், கவிதா ஆகியோர் செய்திருந்தனர். மாவட்ட செயலாளர் மீனாட்சி வரவேற்றார். மாவட்ட பொருளாளர் குருதெட்சி ணாமுர்த்தி நன்றி கூறினார்.

செய்தித்தாள்:மாலைமலர் பக்கம்-2 நாள்:16.12.2017



திருத்துறைப்பூண்டி பள்ளியில்

# சாரண இயக்க பயிற்சி முகாம்

திருத்துறைப்பூண்டி, டிச.16—

திருத்துறைப்பூண்டியில் திருவாரூர் மாவட்டம் பாரத சாரண சாரணியர் சார்பில் சாரண ஆசிரியர்கள் வழிக்காட்டி தலைவிகள் மற்றும் நீலப்பறவையர் தலைவிகள் அடிப்படைப் பயிற்சி சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் நடைப்பெற்றது. முதன்மை கல்வி அலுவலர் சுவாமிநாதன் தலைமை வசித்து துவக்கி வைத்தார். நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம், மாவட்ட சாரண ஆனையர் மணிவண்ணன் , சாரணிய ஆனையர் கல்யாணி, வழக்கறிஞர் தர்மராஜன், உதவி தொடக்கப் பள்ளி அலுவலர் இன்பவேணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமின் தொடக்க கருத்துக்களை முகாம் தலைவர்கள் செல்லத்துரை, சென்னை கஸ்தூரி, திருச்சி கீதா ரவீந்திரன் பேசினார்.

முகாமில் சாரண இயக்க வரலாறு, குறிக்கோள், நோக்கம், விதிமுறை, திசைக் காட்டும் கருவி, முதலுதவி, முடிச்சுகள், கயிற்றுக்கலை உள்ளிட்டவை குறித்து பயிற்சியளிக்கப்பட உள்ளது. ஏற்பாடுகளை தலைமை ஆசிரியை லெட்சுமி· பிரியா, உதவிச் செயலர் சக்கரபாணி, மாவட்ட சாரண அமைப்பு ஆணையர் மோகன், சாரண ஆசிரியர்கள் அறிவு, சீனிவாசன், இளையராஜா, அய்யம் பெருமாள், மாவட்ட சாரணிய அமைப்பு ஆணையர் கவிதா, வழிக்காட்டி தலைவிகள் ஜெயம், தர்மாம்பாள் செய்திருந்தார்கள். மாவட்ட பொருளாளர் குருதெட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.

செய்தித்தாள்:தீக்கதிர் பக்கம்-2 நாள்:17.12.2017

# சாரண ஆசிரியர்களுக்கு அடிப்படை பயிற்சி



மன்னார்குடி, டிச.16-

திருவாரூர் மாவட்ட சாரணியர் சார்பில் சாரண மாவட்ட பாரத சாரண ஆசிரியர்கள், வழிகாட்டித் தலைவிகள் மற்றும் நீலப் பறவையர் தலைவிகள் அடிப்படை குறித்த 7 நாள் பயிற்சி திருத்துறைப்பூண்டி சாய்ராம் பள்ளியில் நடை பெற்றது.

முகாமிற்கு சிஇஓ சுவாமிநாதன் தலைமை வகித்தார். பள்ளி நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம், மாவட்ட சாரண - சாரணி ஆணையர்கள் மணிவண்ணன், கல்யாணி, முன்னாள் அரசு வழக்கறிஞர் தர்மராஜன், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் இன்பவேணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாம் தலைவர்கள் செல்லத்துரை, சென்னை கஸ்தூரி, திருச்சி கீதா ரவீந்திரன் ஆகியோர் கருத்துரை யாற்றினர். மாவட்ட பொருளாளர் குருதெட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.